R4894

KNOWLEDGE NECESSARY TO GROWTH IN GRACE

கிருபையில் வளர அறிவு தேவை

“பழைய மனுஷனையும் அவனது செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ” கொலோசெயர் 3:9,10

நமது வசனத்தில் “களைந்து போட்டு” என்கிற சொற்றொடருக்கு வெளியே போடுதல் என்கிற அர்த்தத்தில் இருக்கிறது. இதை விளக்குவதற்கு ஒரு மகா சபையை எடுத்துக்கொள்ளுவோம். அதிகாரத்தில் உள்ள கட்சி ஒரு ஓட்டினால் அதிகாரத்தை இழக்கிறது.அது மகா சபையிலிருந்து நீக்கப்படுகிறது என்று நாம் புரிந்து கொள்ளுவதில்லை. கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கட்சி மற்ற கட்சிகளை மேற்கொள்ளுகிறது. அப்படிப்பட்ட மாற்றம் என்பது கொள்கைகளிலும் இருக்கும்.

ஆகையால் அதே போல, கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக, மேசியாவின் சரீர அங்கங்களாக ஆவதிலும் மாற்றம் இருக்கும். அநேக காரியங்களில் ஒரு தீவிர மாற்றம் இருக்கும். புதிய சித்தமானது எதை உண்ண வேண்டும், எதை அணிய வேண்டும் என்பதை ஒழுங்குப்படுத்த வேண்டும். உண்மையாகவே, நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, புது சிருஷ்டியாக ஆன பிறகு, அதுவே எல்லாவற்றையும் ஆளும் அதிகாரம் உடையதாக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் ஒரு புது தலைவரை தேர்ந்தெடுத்துள்ளோம். தலைமை ஸ்தானத்தில் மாற்றம் என்பது ஒரு உடனடியான வேலையாக இருக்கிறது. ஒரு காலத்தில் பிரச்சனையின் மறுபக்கத்தில் இருந்தோம். கடைசியில் நாம் ஆண்டவரின் பக்கம் வர தீர்மானித்து அவரை நாம் தலையாக ஏற்றுக்கொண்டோம். அந்த கணத்தில் மாம்சத்தின் சித்தத்தை நீக்கிவிட்டு புது சித்தத்தை அதிகாரத்தில் வைத்து மாற்றத்தை ஏற்றுக்கொண்டோம். பிறகு நாம் புது சிருஷ்டியானோம். ஆனால் நாம் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடையாதிருந்தோம்.

புதிய கட்சி அதிகாரத்திற்கு வரும் போது, அது உடனே எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்த முடியாது. ஆனால் விரும்பிய மாற்றங்களை அதிகாரத்தின் மூலம் ஆணையிடுகிறது. அதே போல் தான் புது சிந்தையும் இருக்கிறது. அது படிப்படியாக மாற்றத்திற்கு மேல் மாற்றத்தை செய்கிறது. இப்படியாக புதுப்பித்தல் வேலை, மறுரூபமாகும் வேலை போய்க்கொண்டிருக்கிறது. புது சிந்தை, எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளை கர்த்தரின் மேற்பார்வை மற்றும் இயக்கத்தின் கீழ் கொண்டு வந்து அதிகமான கட்டுப்பாட்டை பெறுகிறது. நாம் கர்த்தரை அதிகமாக அறிய வரும் போது அவரது சித்தத்தை அதிகமாக காண்கிறோம். அந்த நேரத்திலிருந்து காரியங்களை தெய்வீக கண்ணோட்டத்தில் அதிகமதிகமாக பாராட்டுகிறோம்; மேலும் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு வார்த்தை மற்றும் கிரியையும் ஒழுங்குப்படுத்த பார்க்கிறோம்.

அறிவின் மூலமாகவும், அறிவிலும் புது சிருஷ்டியானது புதுப்பிக்கப்படுகிறது அல்லது புத்துணர்வு அளிக்கப்படுகிறது. கட்டப்பட்டு பலப்படுத்தப்படுகிறது. இந்த உலகத்தின் ஞானம் தேவனுடைய பார்வையில் முட்டாள்தனமாக இருக்கிறது. பழைய சிந்தை இந்த உலகத்தின் ஞானத்தை பெற்றிருந்தது. புது சிருஷ்டி பெறுவது தேவனுடைய சிந்தை ஆகும். பல்வேறு ஆற்றல்களில் புது சிருஷ்டி அபிவிருத்தி அடைவது என்பது படிப்படியானதாக இருக்கிறது; அறிவை சார்ந்திருக்கிறது. புதிய சித்தத்துடன் அறிவானது பலமும் ஆற்றலும் அளிக்கும் சக்தியாக ஆகிறது. புது சிருஷ்டியானது தனது நோக்கத்தை நிறைவேற்ற சந்தர்ப்பத்தை காண்கிறது. இந்த அறிவானது பரத்திலிருந்து வருகிறதாயிருக்கிறது. அது வேதாகமத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன என்பதை அறிவதல்ல; எவ்வளவு வசனங்களை நாம் மேற்கொள் காட்ட முடியும் என்பதல்ல. ஆனால் வாழ்க்கையில் தேவன் அளித்த அநேக கிருபைகளினால் தேவனைப் பற்றிய அப்படிப்பட்ட அறிவுக்கு வருதல், கீழ்ப்படிதலை உறுதிப்படுத்துவதற்கு அவருடைய சித்தம் நமக்கு வெளிப்படுத்துதலே போதுமானது. தேவன் கூறியிருக்கிறவைகளில் நாம் கவனம் செலுத்துகிறதற்கேற்ப நமது அறிவு அதிகரிக்கிறது. பூமிக்குரியவைகளில் அன்பு செலுத்தாமல் பரத்துக்குரியவைகளில் நாம் அன்பு செலுத்துகிறதற்கேற்ப நமது அறிவு அதிகரிக்கிறது.

நாம் அழைக்கப்படுதவற்கான நிபந்தனைகள்

எந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் “தேவன் அழைத்திருக்கிறார்” என்பதை அனைத்து கிறிஸ்துவர்களும் அறிய வேண்டும். அவையாவன: (1) தற்காலத்தில் கிறிஸ்துவோடு கூட பாடுபட வேண்டும். (2) வருங்காலத்தில் உலகை ஆசீர்வதிக்க மகிமைப்படுத்தப்பட்டு அவரோடு ஆளுகை செய்ய வேண்டும். அவர்கள் பாடுபடுவதற்கான இரண்டு காரணங்களையும் அவர்கள் அறிய வேண்டும். தேவன் அவர்களில் குணலட்சணத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அது இல்லாமல் அவர்கள் “ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக” ஆக முடியாது. “தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறவர்களுக்கு” இந்த குணலட்சணங்களை அணிந்து கொள்ளுவது அவசியம். இவைகளில் சிலவற்றை நாம் கவனிக்கலாம்.

“அன்பு மாயமற்றதாக இருப்பதாக” பரிசுத்த பவுல் அன்பின் அவசியத்தைக் குறித்து முன்னரே விளக்கியிருக்கிறார். ஆனால் இப்போது அவர் பாசாங்கான அன்பிற்கு எதிராக நம்மை எச்சரிக்கிறார். அது வெறும் வெளியரங்கமான அன்பையும் பண்பையும் மட்டுமே குறிக்கும். உண்மையான அன்பின் ஆவி, பரிசுத்த ஆவி, மாயமான ஒன்றாக, பாசாங்கான ஒன்றாக இருக்காது. அன்பு என்பது உண்மையானதாக இருதயப்பூர்வமானதாக, வாயினால் வெளிப்படுத்துக்கூடியதாக இருக்கிறது. இந்த அன்பு தேவனிடத்திலும் எல்லாரிடத்திலும் அவர்களது தெய்வ பக்தி அல்லது அதற்கான அவர்களது முயற்சிக்கு தக்கதாக இருக்க வேண்டும். அது நல்ல சரியான, பரிசுத்தமான, உண்மையான அன்பாக இருக்க வேண்டும்.

“தீமையை வெறுத்துவிடுங்கள்.” நாம் தீமை செய்வதை தவிர்ப்பது மாத்திரமல்ல, தீமையை நேசிக்காமல் இருப்பது மாத்திரமல்ல, இதைக்காட்டிலும் மேலாக தீமையை நாம் வெறுக்க வேண்டும். தேவன் மற்றும் எல்லார் மேலுள்ள அன்பானது சுத்தமானதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். நீதியை செய்வது வளர்க்கப்பட வேண்டும். அதே போல பாவத்தை

வெறுப்பதும் அனைத்து வகையான அசுத்தங்களை வெறுப்பதும் வளர்க்கப்பட வேண்டும். இப்படியாக கிறிஸ்துவ குணலட்சணங்களில் நாம் பலம் பெறுவதால் நல்லவைகளுக்கான, பரிசுத்தமானவைகளுக்கான, உண்மையானவைகளுக்கான நமது அன்பு மிகவும் தீவிரமடைகிறது. உண்மையற்ற, அசுத்தமான, பாவமுள்ளவைகளுக்கான நமது எதிர்ப்பு தீவிரமாக இருக்கும். இந்த பரலோக கிருபையாகிய அன்பின் அழகான இணக்கங்களை நாம் அதிகமாக கற்றுக்கொள்ளும் போது, அவை நமது இருதயத்தின் அதிகமான மெல்லிசைகளாகின்றன. பாவமும் சுயநலமும், "உலகத்தின் ஆவியும்" நமக்கு அதிக வருத்தமளிப்பதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் ஆகின்றன.

பரிசுத்தமும் பாவமும் எதிராக இருப்பது போல இவைகளைப் பற்றிய நமது உணர்வும், அன்பு மற்றும் வெறுப்பின் உணர்வுகளால் குறிப்பிடப்பட வேண்டும். நீதிக்கான அன்பின் வளர்ச்சியில் குளிரடைவது பாவத்திற்கான வெறுப்பும் குறைவானதாக இருக்கிறது. ஆகையால் நாம், பாவம், சுயநலம், அசுத்தம் மற்றும் தீமையான சகல வழிகளின்மேல் வெறுப்பை வளர்ப்போமாக. அதன் மூலம் ஆவியின் அழகான கிருபைகளை நமது இருதயங்களில் வளர்ப்பது சுலபமாக இருக்கும்.

பழையவைகள் ஒழிந்து போவதும் எல்லாம் புதிதாவதும் நமது சிந்தைகளிலும் மட்டுமே. உண்மையிலேயே இந்த மாற்றம் நாம் ஆவியின் ஜீவிகளாக ஆகும் போது தான் நிறைவேறும். இதற்கிடையில் நாம் முதலாம் உயிர்த்தெழுதலுக்கு தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்டால் கர்த்தர் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியே இருக்கும்படியான நமது மனதின் விருப்பத்தை, நமது உண்மையான ஆசையை நிரூபிப்பது நம்மிடம் தேவைப்படுகிறது. இதை கர்த்தரிடம் விளங்கப் பண்ணுவதற்கோ நிரூபிப்பதற்கோ நமது இருதயங்களையும் எண்ணங்களையம் நாம் தீவிரமாக கண்காணிப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது.